TNTP120000652023

Presented on : 07-03-2023
Registered on : 07-03-2023
Decided on : 06-06-2026
Duration : 3 years, 2 months, 30 days

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்
முன்னிலை. திரு தி.அன்பு, பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி
2026 ம் ஆண்டு ஜுன் திங்கள் 6 ம் நாள் சனிக் கிழமை
**அசல் வழக்கு எண்.49/2023**

தனம் (எ) தனபாக்கியம் .. வாதி

/எதிர்/

செல்வராணி .. பிரதிவாதி

இவ்வழக்கானது என்முன்பாக கடந்த 30.04.2026 ம் தேதியில் இறுதி விசாரணைக்காக வந்தபோது வாதிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு. எ.மனோகரன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு எ.பால்ராஜ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள், சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**தீர்ப்புரை**

தாவாச்சொத்தில் பிரதிவாதியோ அவரது ஆட்களோ, முகவர்களோ எவ்விதத்திலும் வாதியின் அமைதியான அனுபவத்தினையும், சுவாதீனத்தினையும் எவ்வகையிலும் இடையூறு செய்யாத வகையில் ஓர் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக்கோரி இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

T ANBU
Digitally signed by T ANBU
Date: 2026.06.06 19:42:13 +0530

2. **வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்**.

பிரதிவாதி வாதியின் மூத்த சகோதரர் பெரியசாமியின் மகள் ஆவார். வாதியின் தாயார் அங்கம்மாள், இந்த வழக்கின் பிரதிவாதி மற்றும் சுமதி ஆகியோர்களுக்கு எதிராக இரண்டு அசல் வழக்குகள் தாக்கல் செய்து, அதில் அவருக்கு உரிய பாகத்தை பெற்று இருந்தார். அதில் ஒரு வழக்கு திருச்சி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.120/1992, மற்றொரு வழக்கு அசல் வழக்கு எண்.14/1999 ஆகும். இந்த இரண்டு வழக்குகளில் திருச்சி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வழக்கில் வாதியின் சகோதரர் பாலசுப்ரமணியனின் மனைவி சுமதியையும், அவரது மகன் நந்தகுமாரையும் பிரதிவாதியாக சேர்த்து தொடரப்பட்டதில், இவ்வழக்கு கடந்த 23.11.2013ம் தேதி லோக் அதாலத்தில் சுமூகமாக முடிக்கப்பட்டு, பாகம் பிரித்துக்கொள்ளப்பட்டது. அதேபோன்று துறையூர் மாவட்ட நீதிமன்ற வழக்கில் இந்த வழக்கின் பிரதிவாதியையும், அவரது தாயார் சித்திராவையும் தரப்பினராக சேர்த்து தாக்கல் செய்யப்பட்டதில் அவ்வழக்கில் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு, அதன் பின்னர் நிறைவேற்று மனு எண்.20/2014 தாக்கல் செய்து, அதில் வாதியின் தாயார் அங்கம்மாளுக்கு, அவர் அனுபவித்து வந்த பாகம் கடந்த 28.04.2016ம் தேதியன்று நீதிமன்ற அமீனா மூலம் வாதியின் தாயாருக்கு சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டது.

3. மேலும் வாதி கடந்த 2018ம் ஆண்டு துறையூர் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.24/18 என்ற எண்ணில் வாதியின் சகோதரர் பாலசுப்ரமணியன் மனைவி சுமதி மீது வாதியின் தகப்பனாரிடமிருந்து கடந்த 1981ம் ஆண்டு பாலசுப்பிரமணியன் பெற்று இருந்த தான செட்டில்மெண்ட் பத்திரம் தொடர்பாக வழக்கு தொடர்ந்து அந்த வழக்கில் வாதியின் தாயார் அங்கம்மாள் தாக்கல் செய்த வழக்கு விவரங்கள் குறிப்பிடப்படவில்லை என்று கூறி மாண்புமிகு சார்பு நீதிமன்றம் கடந்த 24.10.2019ம் தேதி அன்று தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. வாதியின் தாயார் அங்கம்மாள் இறந்துவிட்டதால் வாதி மேற்கொண்டு அசல் வழக்கில் மேல்முறையீடுகள் எதுவும் செய்யவில்லை.

4. வாதியின் தாயார் நீதிமன்ற உத்தரவுகள் மூலம் கிடைக்கப்பெற்று தனது முழு அனுபோகத்தில் வைத்து அனுபவித்து வந்த நிலையில், வாதியின் தாயார் அங்கம்மாள் கடந்த 04.01.2018 அன்று உடல்நலம்

T ANBU
Digitally signed by T ANBU
Date: 2026.06.06 19:42:23 +0530

குன்றி இறந்துவிட்டார். வாதியின் தாயார் அங்கம்மாள் தனது இறப்பிற்கு முன்னர் கடந்த 30.01.2009ம் தேதியன்று ஒரு உயில் எழுதி அதனை துறையூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து அதில் மேற்படி தாவாக்கள் மூலம் கிடைக்கப்பெற்ற வாதியின் தாயார் அங்கம்மாளின் பாகத்தினை இந்த வழக்கின் வாதியே அடைந்துகொள்ளவேண்டும் என்று உயில் சாசனத்தில் குறிப்பிட்டுள்ளார். அந்த வகையில் வழக்கு சொத்து வாதிக்கு கிடைக்கப்பெற்று அவரது முழு அனுபோகத்தில் இருந்து விவசாயம் செய்து வந்த நிலையில், வழக்கு சொத்திற்கு கிழக்கே பிரதிவாதியின் விவசாய நிலம் அமைந்துள்ளது.

5. கடந்த 05.02.2023ம் தேதியன்று பிரதிவாதி அவரது வயலுக்கு கதிர் அறுக்கும் இயந்திரத்தினை வாதியின் வயலின் ஒரு பக்கமாக இறக்கி அறுவடை செய்து கொள்வதாக கேட்டு, அதற்கு வாதி சம்மதித்தார். இந்நிலையில் பிரதிவாதி மேற்படி இயந்திரம் இறக்கிய பாதை அவருடையது என்று கூறி வாதியை மறுநாளே அறுவறுக்கத்தக்க வார்த்தைகளை கூறி திட்டி, இனிமேல் எனது வயலிற்கு இந்த வழியாகத்தான் செல்லுவேன் என வாதியினை மிரட்டியதோடு, துறையூர் காவல்நிலையத்தில் வாதி மீது புகார் செய்துள்ளார். மேற்படி புகாரின் பேரில் விசாரணை செய்த காவல்துறையினர் பிரதிவாதியை அழைத்து வழக்கு சொத்தில் எந்த இடையூறும் செய்யக்கூடாது என அறிவுரை கூறி அனுப்பிவைத்தனர். அதன் பின்னர் வழக்கு சொத்தில் பயிரிட்டுள்ள எள்ளு பயிர்களை அழிக்கும் எண்ணம் கொண்டு அடியாட்களை கொண்டு கடந்த 18.02.2023ம் தேதி வழக்கு சொத்தில் அத்து மீறி நுழைந்து பாதை அமைக்க முற்பட்டார். எனவே, பிரதிவாதியின் செயலை தடுக்கவே இவ்வழக்கினை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார்.

6. <u>பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>

வாதியின் வழக்கு பொய்யும், புரட்டும், மோசடியுமாகும். இப்பிரதிவாதி வாதியின் மூத்த சகோதரர் பெரியசாமியின் மகள் என்பது மட்டுமே உண்மை. மற்றபடி வாதியின் தாயார் அங்கம்மாள் இந்த வழக்கின் பிரதிவாதி மற்றும் சுமதி ஆகியோருக்கு எதிராக இரண்டு அசல் வழக்குகள் தாக்கல் செய்து, அதில் அவருக்கு உரிய பாகத்தை

T ANBU Digitally signed by T ANBU Date: 2026.06.06 19:42:31 +0530

பெற்றிருந்தார் என்பதை பற்றியோ, அதில் ஒரு வழக்கு திருச்சி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண். 120/1992 என்பதை பற்றியோ, மற்றொன்று துறையூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.14/1999 என்பதை பற்றியோ, இந்த 2 வழக்குகளில் திருச்சி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வழக்கில் வாதியின் சகோதரர் பாலசுப்ரமணியனின் மனைவி சுமதியையும், அவரது மகன் நந்தகுமாரையும் பிரதிவாதியாக சேர்த்து தொடரப்பட்டதில், மேற்படி வழக்கு கடந்த 23.11.2013–ம் தேதியன்று மக்கள் நீதிமன்றத்தில் சுமூகமாக முடிக்கப்பட்டு, பாகம் பிரித்துக்கொள்ளப்பட்டது என்பதை பற்றியோ இப்பிரதிவாதி தனக்கு எதுவும் தெரியாது என்று கூறுகிறார். மேற்படி சங்கதிகளுக்கும், இவ்வழக்கு சங்கதிகளுக்கும் உள்ள தொடர்பு குறித்து வாதி எதுவும் கூறாமல் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதிலிருந்தே இவ்வழக்கும் அனாவசியமானது என்பது தெளிவாகிறது.

7. மேலும், துறையூர் மாவட்ட நீதிமன்ற வழக்கில் இந்த வழக்கின் பிரதிவாதியையும், அவரது தாயார் சித்ராவையும் தரப்பினராக சேர்த்து தாக்கல் செய்யப்பட்டதில், அந்த வழக்கில் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு, அதன் பின்னர் 20/2014 என்ற எண்ணில் நிறைவேற்று மனு தாக்கல் செய்து, அதில் வாதியின் தாயார் அங்கம்மாளுக்கு அவர் அனுபவித்து வந்த பாகம் கடந்த 28.04.2016–ம் தேதியன்று கோர்ட் பெய்லிப் மூலம் வாதியின் தாயாருக்கு சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டது என்றும், சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டதற்கான ஆவணம் வா.சா.ஆ 2 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறும் வாதி மேற்படி நிறைவேற்று மனுவிற்கு முன்னதாக தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு பற்றியோ, அதன் பேரில் பிறப்பிக்கப்பட்ட முதல்நிலை தீர்ப்பாணை பற்றியோ எதுவும் கூறாமலும், அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யாமலும் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதிலிருந்தே வாதி சுத்தமான கரங்களுடன் நீதிமன்றத்தை நாடவில்லை என்பதும், உண்மை சங்கதிகளை சொல்லி இவ்வழக்கை தாக்கல் செய்யவில்லை என்பதும் தெளிவாக விளங்குகிறது. மேலும் இறுதிநிலை தீர்ப்பாணையின் நகல், அதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து எதுவும் கூறாமலும், அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யாமலும் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கும் நிலைக்கத்தக்கதல்ல

T ANBU

Digitally signed by T ANBU
Date: 2026.06.06 19:42:38 +0530

8.வாதி கடந்த 2018–ம் ஆண்டு துறையூர் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண். 24/2018 என்ற எண்ணில் வாதியின் சகோதரர் பாலசுப்ரமணியன் மனைவி சுமதியின் மீது வாதியின் தகப்பனாரிடமிருந்து கடந்த 1981–ம் ஆண்டு பாலசுப்ரமணியன் பெற்றிருந்த தானசெட்டில் மெண்ட் பத்திரம் தொடர்பாக வழக்கு தொடர்ந்து, அந்த வழக்கில் வாதியின் தாயார் அங்கம்மாள் சரியான விவரங்களை குறிப்பிடவில்லை என்று கூறி மாண்புமிகு சார்பு நீதிமன்றம் கடந்த 24.10.2019–ம் தேதி வழக்கை தள்ளுபடி செய்துவிட்டதாக வழக்குரை 4–வது பாராவில் சொல்லப்பட்டுள்ள சங்திகள் அனாவசியமானதாகும்.

9. உண்மையில் வாதியின் தகப்பன் பனையடியான் உயிருடன் இருக்கும்போதே அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவரும், அவரது மகன்களான பெரியசாமியும், பாலசுப்ரமணியனும் சேர்ந்து கடந்த 20.03.1980–ல் பாகம் பிரித்துக்கொண்டு, அதைப் பொறுத்து ஒரு பதிவு செய்யப்பட்ட பாகப்பத்திரமும் எழுதிக்கொண்டுள்ளார்கள். மேற்படி பாகப்பிரிவினையில் தாவா சர்வே எண்ணான 204/5–ல் உள்ள ஏக்கர் 2.38 செண்டில் இந்த பிரதிவாதியின் தகப்பன் பெரியசாமிக்கு ஏக்கர் 0.72½ செண்ட் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கு விரோதமாக தாவா சொத்து விபரத்தில் ஏக்கர் 0.74 செண்ட் நிலமாக காட்டியிருப்பது சரியல்ல. அதேபோல் 20.03.1980–ல் ஏற்பட்ட பாகப்பத்திரத்தில் வாதியின் தகப்பனுக்கு பிரிந்த சொத்துக்களை வாதியின் தகப்பனாரை கொண்டு வாதியின் சகோதரரான பாலசுப்ரமணியனுக்கு செண்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்ததிலும் வாதிக்கும், வாதியின் கணவருக்கும் பெரும் பங்கு உண்டு. அதனால்தான் வாதியின் கணவரை கொண்டு சொத்து விவரங்களை தவறாக குறிப்பிட்டு வழக்குரை 4–வது பத்தியில் சொல்லப்பட்டுள்ள வழக்கு தாக்கல் செய்து தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும் இப்பிரதிவாதியின் தகப்பனுக்கு 20.03.1980–ம் தேதியிட்ட பாகப்பத்திரத்தின் மூலம் கிடைத்த சொத்துக்களை இப்பிரதிவாதிக்கு முழுமையாக கிடைக்கவிடாமல் செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலும், அனுபவம் செய்யவிடாமல் தடுக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலுமே வாதியின் கணவரது தூண்டுதலின்பேரில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

10. பிரதிவாதி தனக்கு சொந்தமான நிலத்தில் நெல் அறுவடை

T ANBU
Digitally signed by T ANBU
Date: 2026.06.06 19:42:45 +0530

செல்வதற்கு வாகனம் ஓட்டிச்செல்ல வாதி பாதைவிடாமல் தடுத்து தகராறு செய்ததால் அது தொடர்பாக தனக்கு உரிய பாதுகாப்பு வழங்க கோரி இப்பிரதிவாதி துறையூர் காவல் நிலையத்தில் கடந்த 19.01.2023–ம் தேதி புகார் கொடுத்துள்ளார். அதன் பேரில் வாதியை துறையூர் காவல்துறையினர் அழைத்து விசாரணை செய்தபோது, வாதியானவர் பிரதிவாதி அவரது வயலுக்கு நெல் அறுவடை செய்யும் இயந்திரத்தை கொண்டு சென்று நெல் அறுவடை செய்வதை தடுக்கமாட்டேன் என்று உறுதிமொழி வாக்குமூலம் எழுதிக்கொடுத்துள்ளார். அதனடிப்படையில் இப்பிரதிவாதி கடந்த 21.01.2023–ம் தேதி தனது வயலில் சாகுபடி செய்திருந்த நெல்லை அறுவடை செய்து முடித்துவிட்டார். இதற்கு விரோதமாக கடந்த 05.02.2023–ம் தேதி பிரதிவாதி அவரது வயலுக்கு கதிர் அறுக்கும் இயந்திரத்தை வாதியின் வயலில் ஒரு பக்கமாக இறக்கி அறுவடை செய்துகொள்வதாக கேட்டார் என்றும், பிரதிவாதியின் கோரிக்கை ஏற்று வாதி விவசாய பயிர்களை காப்பதற்காக வாதியின் வயலில் கதிர் அறுக்கும் இயந்திரத்தை இறக்கி பிரதிவாதியின் வயலில் அறுவடை செய்ய சம்மதம் தெரிவித்தார் என்றும், இதனால் பிரதிவாதி வழக்கு சொத்தான வாதியின் வயல் வழியாக கதிர் அறுக்கும் இயந்திரத்தை இறக்கி அறுவடையை முடித்துவிட்டார் என்றும் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானவையாகும்.

11.வாதியின் சம்மதத்தை பெற்ற பிரதிவாதி மேற்படி இயந்திரம் இறக்கிய பாதை அவருடையது என்று கூறி வாதியை மறுநாளே அறுவறுக்கத்தக்க வார்த்தைகளை கூறி திட்டியுள்ளார் என்றும், இனிமேல் எனது வயலுக்கு இந்த வழியாகத்தான் செல்வேன், உன்னால் முடிந்ததை பார்த்துக்கொள் என்று வாதியை மிரட்டிவிட்டு பிரதிவாதி தனது செல்வாக்கை பயன்படுத்தி வாதியை பயமுறுத்த வேண்டும் என்று எண்ணி துறையூர் காவல் நிலையத்தில் வாதியின் மீது புகார் செய்துள்ளார் என்றும், இந்த புகாரின் பேரில் வாதியை அழைத்து விசாரணை செய்த காவல் துறையினர் வழக்கு சொத்து சம்பந்தமான நீதிமன்ற ஆவணங்களை பார்வையிட்டு இனிவரும் காலங்களில் வாதியின் அனுபோகத்தில் உள்ள வழக்கு சொத்தில் எந்த ஒரு இடையூறும் செய்யக்கூடாது என்று பிரதிவாதிக்கு அறிவுரை கூறி அனுப்பி வைத்ததாகவும் வழக்குரை 8–வது பாராவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அப்பட்டமான மோசடியாகும். வழக்கு சொத்தும், அதற்கு கீழ்புறம் உள்ள இப்பிரதிவாதிக்கு சொந்தமான

T ANBU
Digitally signed by T ANBU
Date: 2026.06.06 19:42:53 +0530

சொத்தும் கடந்த 20.03.1980–ம் தேதியிட்ட பாகப்பத்திரத்தில் இப்பிரதிவாதியின் தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்டதாகும். அவ்வாறு ஒதுக்கப்பட்ட நிலத்தில் வாதியின் தாயார் வழக்கு போட்டு அவருக்கான பாகம் ஒதுக்கப்பட்டபோது, மேற்படி நிலத்திற்கு கீழ்புறம் உள்ள பிரதிவாதியின் நிலத்திற்கு பாதை ஒதுக்கித்தான் பிரிவினை செய்யப்பட்டது. அவ்வாறிருக்க இப்பிரதிவாதி தனக்கு சொந்தமான நிலத்திற்கு செல்லவிடாமல் தடுப்பதற்கு வாதியும் முரண்தடை தோஷத்தால் தடை செய்யப்பட்டுள்ளார்.

12. மேலும், வாதி வழக்கு சொத்தில் பயிரிட்டுள்ள எள் பயிர்களை அழிக்கும் எண்ணம் கொண்டு, அடியாட்களை வைத்துக் கொண்டு கடந்த 18.02.2023–ம் தேதியன்று வழக்கு சொத்தில் அத்துமீறி நுழைந்து பாதை அமைக்க முற்பட்டார் என்றும், பிரதிவாதியின் செயலை வாதி தனது கணவர் மற்றும் உறவினர்கள் துணைக்கொண்டு தடுத்துவிட்டதாகவும், பிரதிவாதியின் செயலை தடுக்கவே வாதி இந்த நீதிமன்றத்தை நாட வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார் என்றும் வழக்குரை 9–வது பாராவில் சொல்லியுள்ள சங்கதிகள் வாதியின் மனமறிந்த மோசடியாகும்.

13. இந்த வழக்கும் நீதிநெறி பரிகாரமான உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நீதிநெறி பரிகாரமான உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி நீதிமன்றத்தை நாடும் நபர் உண்மை சங்கதிகளை சொல்லி வழக்கு தாக்கல் செய்ய வேண்டும். வழக்கு சொத்தில் பயிரிட்டுள்ள எள் பயிர்களை அழிக்கும் எண்ணம் கொண்டு அடியாட்களை வைத்துக்கொண்டு கடந்த 18.02.2023 ம் தேதியன்று வழக்கு சொத்தில் அத்துமீறி நுழைந்து பாதை அமைக்க முற்பட்டார் என்று கூறிவிட்டு வழக்குமூல பாராவில் தாவா சொத்தினை பிரதிவாதி ஆக்கிரமிக்க முயற்சித்த தேதியாக 05.02.2023 ம் தேதி முதல் வழக்குமூலம் ஏற்பட்டதாக முன்னுக்கு பின் முரணாக வழக்கு மூலத்தினை சொல்லி வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல, தள்ளுபடி செய்யப்படவேண்டும் என எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்.

14. வாதியின் வழக்குரை, பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை, ஆகியவற்றினை ஆய்ந்து கீழ்க்கண்ட எழுவினாக்கள் தீர்வுக்காக வனையப்பட்டன.

T ANBU Digitally signed by T ANBU Date: 2026.06.06 19:43:01 +0530

1. வாதிக்கு தாவாச்சொத்தை அவருடைய தாயார் கடந்த 30.01.20009 ம் தேதியில் எழுதிவைத்ததாக கூறும் ஆவணம் உண்மையானதா?
2. வாதி கூறும் உயிலை மெய்பித்துள்ளாரா?
3. வாதி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?
4. வாதிக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரம் என்ன?

15/ வழக்கின் சூழ்நிலைக்கேற்ப இன்று கீழ்க்கண்ட எழுவினா உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 14 விதி 5 ன் கீழ் கூடுதல் எழுவினா வனையப்பட்டது.

**<u>கூடுதல் எழுவினா 1</u>**

வாதி, வாதுரைத்த வகையில் தாவாச்சொத்தில் தனித்து அனுபவத்தில் உள்ளாரா?

16. வாதியின் தரப்பில் வாதி தனம் (எ) தனபாக்கியம் வா.சா.1 ஆகவும், காளிதாஸ் என்பவர் வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1, முதல் வா.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதி தரப்பில் பிரதிவாதி செல்வராணி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.3 வரையிலான சான்றாணவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

17. வாதியின் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் எழுத்துபூர்வமான வாதுரை தாக்கல் செய்து பிரதானமாக பி.வா.சா.1 பிரதிவாதி, வாதியின் குறுக்கு விசாரணையில் நிறைவேற்று மனு எண்.20/2014 மற்றும் அதில் உள்ள தரப்பினர்கள் மற்றும் அசல் வழக்கு எண்.14/1999 ஆகியவற்றில் ஏற்பட்ட தீர்ப்பாணை பொருத்து சரி என ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துள்ளதாகவும், பி.வா.சா.ஆ.1 பாகப்பத்திரத்தில் சொல்லியுள்ளதுபோன்று பூஸ்துதியில் பாதையினை ஒட்டி வயல் என எழுதப்படவில்லை என்றால சரிதான் என ஒப்புக்கொண்டுள்ளதாகவும், வாதுரையில் சொல்லப்பட்டுள்ள நான்கெல்லை சரி என ஒப்புக்கொண்டதாகவும், மயான பாதைகிக்கு கிழக்கு பக்கத்தில் உள்ள கிணறு, அதனை ஒட்டி 5 அடி பாதை, மோட்டார் கொட்டகைக்கு செல்கின்றது என்றால் சரிதான் என ஒப்புக்கொண்டதாகவும், 1 ½ செண்ட் நிலத்தின் வழியே தெற்கே என்னுடைய நிலத்திற்கு வரலாம்

T ANBU Digitally signed by T ANBU Date: 2026.06.06 19:43:09 +0530

என்றால் சரிதான் என ஒப்புக்கொண்டதாகவும், வா.சா.ஆ.10 புகைப்படத்தில் உள்ள கிணறு பொது கிணறு என்றும், இரண்டு வயல்களுக்கு இடையே தென்னை மரத்தினை நோக்கி செல்லும் பாதை வழியாக சென்றால் தன் நிலத்திற்கு செல்லலாம் என்றால் சரிதான் எனவும், வா.சா.ஆ.5 புகைப்படத்தில் உள்ள சக்கர அச்சு நிலமானது வாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான் என்றும் வா.சா.ஆ.5 புகைப்படத்தில் உள்ள வாதியின் நிலத்தின் வழியே பாதை அமைக்க முயற்சித்ததால்தான் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளதாக சொல்வது சரிதான் என்றும், காவல்துறை அனுமதி அளித்ததற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால்சரிதான், தொலைபேசி வழியாக கூறினார்கள் என்றும், இந்த சாட்சியின் பதிலை கவனமாக பரிசீலிக்கையில் வாதியின் அனுபவத்திற்கு அச்சுறுத்தலும், பிரதிவாதியின் சக்தியினை பயன்படுத்தியதை காட்டுகிறது என்றும், மேலும், தனக்கும் பிரதிவாதிக்கும் நிலங்கள் நீதிமன்றத்தின் மூலம் நிலங்கள் பிரித்துக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான் ஒப்புக்கொண்டதாகவும், மேலும் பிரதிவாதி புதிய சங்கதிகளை எதிர்வழக்குரையில் குறிப்பிடாத சங்கதிகளை முதல் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளதாக ஒப்புக்கொண்டுள்ளதாகவும், பாகப்பத்திரத்தில் கண்டுள்ள எ,பி,சி அட்டவணை பற்றி முதல் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான் என்றும், வாதி தனது வழக்கை சாட்சிய ஆவணங்கள் மூலம் நிரூபித்துள்ளதாகவும், எனவே, தாவாப்படி தீர்ப்பாகவேண்டும் என வாதிட்டார்.

18. பிரதிவாதியின் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் வாதியின் தகப்பன் பனையடியான் உயிருடன் இருக்கும்போதே அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவரும், அவரது மகன்களான பெரியசாமியும், பாலசுப்ரமணியனும் சேர்ந்து கடந்த 20.03.1980–ல் பாகம் பிரித்துக்கொண்டு, அதைப் பொறுத்து ஒரு பதிவு செய்யப்பட்ட பாகப்பத்திரமும் எழுதிக்கொண்டுள்ளார்கள் எனவும், மேற்படி பாகப்பிரிவினையில் தாவா சர்வே எண்ணான 204/5–ல் உள்ள ஏக்கர் 2.38 செண்டில் இந்த பிரதிவாதியின் தகப்பன் பெரியசாமிக்கு ஏக்கர் 0.72½ செண்ட் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது எனவும், அதேபோல் 20.03.1980–ல் ஏற்பட்ட பாகப்பத்திரத்தில் வாதியின் தகப்பனுக்கு பிரிந்த சொத்துக்களை வாதியின் தகப்பனாரை கொண்டு வாதியின் சகோதரரான பாலசுப்ரமணியனுக்கு செண்டில்மெண்ட் பத்திரம் எழுதி

T ANBU
Digitally signed by T ANBU
Date: 2026.06.06 19:43:19 +0530

வைத்ததிலும் வாதிக்கும், வாதியின் கணவருக்கும் பெரும் பங்கு உண்டு என்றும், பிரதிவாதி தனக்கு சொந்தமான நிலத்தில் நெல் அறுவடை செல்வதற்கு வாகனம் ஓட்டிச்செல்ல வாதி பாதைவிடாமல் தடுத்து தகராறு செய்ததால் அது தொடர்பாக தனக்கு உரிய பாதுகாப்பு வழங்க கோரி இப்பிரதிவாதி துறையூர் காவல் நிலையத்தில் கடந்த 19.01.2023–ம் தேதி புகார் கொடுத்துள்ளார். அதன் பேரில் வாதியை துறையூர் காவல்துறையினர் அழைத்து விசாரணை செய்தபோது, வாதியானவர் பிரதிவாதி அவரது வயலுக்கு நெல் அறுவடை செய்யும் இயந்திரத்தை கொண்டு சென்று நெல் அறுவடை செய்வதை தடுக்கமாட்டேன் என்று உறுதிமொழி வாக்குமூலம் எழுதிக்கொடுத்துள்ளார் எனவும் வாதிட்டார்.

19. வழக்கு சொத்தும், அதற்கு கீழ்புறம் உள்ள இப்பிரதிவாதிக்கு சொந்தமான சொத்தும் கடந்த 20.03.1980–ம் தேதியிட்ட பாகப்பத்திரத்தில் இப்பிரதிவாதியின் தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்டதாகும். அவ்வாறு ஒதுக்கப்பட்ட நிலத்தில் வாதியின் தாயார் வழக்கு போட்டு அவருக்கான பாகம் ஒதுக்கப்பட்டபோது, மேற்படி நிலத்திற்கு கீழ்புறம் உள்ள பிரதிவாதியின் நிலத்திற்கு பாதை ஒதுக்கித்தான் பிரிவினை செய்யப்பட்டது. அவ்வாறிருக்க இப்பிரதிவாதி தனக்கு சொந்தமான நிலத்திற்கு செல்லவிடாமல் தடுப்பதற்கு வாதியும் முரண்தடை தோஷத்தால் தடை செய்யப்பட்டுள்ளார்.

20. நீதிநெறி பரிகாரமான உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி நீதிமன்றத்தை நாடும் நபர் உண்மை சங்கதிகளை சொல்லி வழக்கு தாக்கல் செய்ய வேண்டும். வழக்கு சொத்தில் பயிரிட்டுள்ள எள் பயிர்களை அழிக்கும் எண்ணம் கொண்டு அடியாட்களை வைத்துக்கொண்டு கடந்த 18.02.2023 ம் தேதியன்று வழக்கு சொத்தில் அத்துமீறி நுழைந்து பாதை அமைக்க முற்பட்டார் என்று கூறிவிட்டு வழக்குமூல பாராவில் தாவா சொத்தினை பிரதிவாதி ஆக்கிரமிக்க முயற்சித்த தேதியாக 05.02.2023 ம் தேதி முதல் வழக்குமூலம் ஏற்பட்டதாக முன்னுக்கு பின் முரணாக வழக்கு மூலத்தினை சொல்லியுள்ளார். மேலும், வா.சா.ஆ.4 ஆவணமான தாவாச்சொத்து சம்மந்தப்பட்ட பட்டா கூட்டுப்பட்டாவாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கூட்டு உரிமையாளருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க இயலாது என்றும், வா.சா.ஆ.6 உயில் ஆவணமானது, வாதியின் பாட்டி அங்கம்மாளுக்கு தாவாச்சொத்தின் சுவாதீனம் கொடுப்பதற்கு

T ANBU
Digitally signed by T ANBU
Date: 2026.06.06 19:43:26 +0530

முன்பு எழுதப்பட்டதால், செல்லத்தக்கதல்ல எனவும், எனவே, இவ்வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல, தள்ளுபடி செய்யப்படவேண்டும் என வாதிட்டார்.

21.**எழுவினாக்கள் 1,2,**

வாதிக்கு தாவாச்சொத்தை அவருடைய தாயார் கடந்த 30.01.20009 ம் தேதியில் எழுதிவைத்ததாக கூறும் ஆவணம் உண்மையானதா என்பதைப்பற்றியும், வாதி கூறும் உயிலை மெய்பித்துள்ளாரா? என்பதைப்பற்றியும் அமைந்தவைகளாகும்.

தாவாச்சொத்தை வாதி தனம் (எ) தனபாக்கியத்தின் தாயார் அங்கம்மாளுக்கு நிறைவேற்று மனு எண்.20/2014 அசல் வழக்கு எண்.14/1999 என்ற வழக்கின் தீர்ப்பின்படி தனது தாயார் அங்கம்மாளுக்கு சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டதாகவும், அந்த ஆவணங்கள் வா.சா.ஆ.1,2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 நிறைவேற்று மனு எண்.20/2014 ல் 28.04.2016 ம் தேதி சொத்து விவரத்தில் காட்டப்பட்டுள்ள தாவாச்சொத்து சர்வே எண்.204/5– ஏக்கர் 0.74 செண்ட் உள்ளதில், மேற்படி சொத்து மூன்று சமபாகங்களாக பிரித்து அதில் ஒரு பாகமாக மேல்புறம் ஓரத்தில் ஆணையரின் முதல் வரைபடத்தில் பச்சை வண்ணமிட்டு காட்டப்பட்டுள்ள பகுதியான ஏக்கர் 0.24 செண்ட் நிலத்தினை இந்த நீதிமன்றத்தின் கட்டளை நிறைவேற்றுனர் திரு வி.ராஜேந்திரன் அங்கம்மாளுக்கு சுவாதீனம் ஒப்படைப்பு செய்யப்பட்ட ஆவணமாக காணப்படுகிறது. அதன்படி தனக்கு பாத்தியப்பட்டதாக முதல் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார். பிறகு இந்த அங்கம்மாள் தனது வாதியான தனம் (எ) தனபாக்கியத்திற்கு தாவாச்சொத்தைப் பொருத்தும், மற்ற சொத்தைப் பொருத்தும் வா.சா.ஆ.6 ஆன கடந்த 30.01.2009 ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட உயில் மூலம் எழுதி வைத்ததாக சாட்சியமளித்துள்ளார். இந்த வா.சா.ஆ.6 ஆவணம் தான் இந்த எழுவினாக்களுக்கு முக்கிய கரும்பொருளாக உள்ளது. இந்த ஆவணத்தினை பரிசீலிக்கையில், மற்ற சொத்துக்கள் மற்றும் மற்ற சொத்துக்களுடன் சேர்த்து வாதி கூறியது போன்று இந்த நீதிமன்றத்தின் அசல் வழக்கு எண்.14/1999 என்ற வழக்கு நிலுவையில் இருப்பதாகவும், அந்த வழக்கின் தீர்ப்பின் படி தனக்கு கிடைக்கவேண்டிய சக சொத்துக்களையும், வாதி அடையவேண்டியது என குறிப்பிட்டுள்ளார். ஆனால் சொத்து விவரம் குறிப்பிடப்படவில்லை. இந்த வா.சா.ஆ.6 ஆவணத்தினை எழுதிவைத்த அங்கம்மாள் 9

T ANBU
Digitally signed by T ANBU
Date: 2026.06.06 19:43:33 +0530

ஆண்டுகள் கழித்து 2012 ம் ஆண்டுதான் இறந்துள்ளார்.

22. வாதியின் தரப்பில் வா.சா.ஆ.3 வாரிசு சான்றிதழில் வாதியின் தகப்பனார் அங்கம்மாளின் கணவர் பனையண்டியன் வாரிசாக வாதி மற்றும் பிரதிவாதியின் தந்தை பெரியசாமி, செல்லம், பாலசுப்ரமணியன் என மூன்று நபர்கள் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரதிவாதி இவ்வாறு உயில் ஆவணத்தினைப் பொருத்தும், தாவாச்சொத்தைப் பொருத்து பி.வா.சா.ஆ.1 பாகப்பத்திரத்தின் மூலம் தனக்கு பாத்தியப்பட்டதாக தெரிவித்துள்ள நிலையில், நிறைவேற்று மனு எண்.20/2014 வழக்கின் முழுமையான ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை எனவும், மேலும் வா.சா.ஆ.6 உயில் ஆவணத்தினை எழுதி வைத்ததாக, அதன் மூலம் தனக்கு கிடைக்கப்பெற்றதாக கூறியிருப்பதை வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் என எதிர்வழக்குரை தாக்கல் செய்தும், குறுக்கு விசாரணையில் இந்த ஆவணத்தின் செல்லு தன்மை, மற்றும் உண்மை தன்மை பொருத்து கடுமையாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ள நிலையில், முக்கிய எழுவினாவான இந்திய வாரிசுரிமை சட்டம் 1925 பிரிவு 63 மற்றும் சாட்சிய சட்டம் பிரிவு 68 ன் கீழ் வாதி வா.சா.ஆ.6 உயில் ஆவணத்தினை நிரூபிக்க கடமைப்பட்டவரா? என்பது முக்கிய சட்ட வினாவாக உள்ளது.

23. சாட்சிய சட்டம் பிரிவு 68 ஐ கவனமாக பரிசீலிக்கையில் வழக்கு சம்மந்தப்பட்ட உயில் ஆவணத்தினை எழுதியதை நிரூபிக்கவேண்டும் எனில் ஒரு சாட்சியாவது கண்டிப்பாக விசாரிக்கப்படவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் பிரதிவாதியானவர், வாதியின் மூத்த சகோதரர் பெரியசாமியின் மகள் ஆவார்என வாதியே வழக்குரை பத்தி 3 ல் ஒப்புக்கொண்டுள்ளார். எனவே, வாதியானவர், வா.சா.ஆ.6 உயில் ஆவணத்தினைப் எழுதி வைத்த அங்கம்மாளின் மகன் வயிற்று வாரிசு என்பதால், சொத்தில் அக்கறையுள்ள நபர். எனவே, வா.சா.ஆ.6 ஆணத்தினைப் பொருத்து சந்தேகத்தினை எழுப்ப பிரதிவாதிக்கு உரிமை உள்ளது. இந்த ஆவணத்தின் அடிப்படையில் வாதி உரிமை மூலத்தினை காண்பிப்பதால், சாட்சிய சட்டப்பிரிவு 68 ன் கீழ் வா.சா.ஆ.6 ஆவணத்தில் சான்றொப்பம் இட்ட ஒரு சாட்சியாவது விசாரிக்கப்படவேண்டும். ஆனால் இவ்வழக்கானது உரிமை விளம்புகை வழக்கு அல்ல. மாறாக சுவாதீனம் மற்றும் அமைதியான அனுபவத்தினைப் பொருத்த வழக்கு ஆகும். இதுபோன்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரும் வழக்குகளில் உரிமை

T ANBU
Digitally signed by T ANBU
Date: 2026.06.06 19:43:39 +0530

மூலத்தினை இடையீட்டாக தீர்வு காணலாம். மாறாக பிரதான எழுவினா வனைந்து தீர்வு காண இயலாது. இவ்வழக்கில், வாதி இந்திய வாரிசுரிமை சட்டம் 1925 சட்டப்பிரிவு 63ன்கீழும், மற்றும் சாட்சிய சட்டப்பிரிவு 68ன் கீழ் குறைந்தது ஒரு சான்றொப்ப சாட்சியத்தினை விசாரிக்காததால், இவ்வழக்கில் தீர்வு காணும் பொருட்டு வா.சா.ஆ.6 உயில் ஆவணத்தினை பிரதிவாதிக்கு எதிராக நிரூபிக்கவில்லை எனவும், மேலும் உண்மை தன்மையினைப் பொருத்தளவில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்பதாலும், இந்த ஆவணம் உண்மையான ஆவணம் இல்லை என்பதைப் பொருத்து பிரதிவாதி தரப்பில் சாட்சியம் முன்னிலைப்படுத்தவில்லை என்பதாலும், வா.சா.ஆ.6 ஆவணம் பிரதிவாதிக்கு எதிராக நிரூபிக்கவில்லை என்றும், உண்மையான ஆவணமா? என்பதைப் பொருத்து இருதரப்பிலும் சாட்சியம் முன்னிலைப்படுத்தவில்லை. எனவே, உண்மை தன்மையினைப் பொருத்து எவ்விதமான முடிவு இன்றியும், ஆனால் வா.சா.ஆ.6 உயில் ஆவணம் வாதிக்கு எதிராக நிரூபிக்கவில்லை என முடிவு செய்து, இந்த எழுவினாக்களுக்கு வாதிக்கு எதிராகவும், பிரதிவாதிக்கு ஆதரவாகவும் தீர்வு காணப்படுகிறது.

24. <u>**எழுவினா 3, கூடுதல் எழுவினா 1**</u>

வாதி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா? என்பதைப்பற்றியும், வாதி, வாதுரைத்த வகையில் தாவாச்சொத்தில் தனித்து அனுபவத்தில் உள்ளாரா? என்பதைப்பற்றியும் பரிசீலிக்கையில் கூடுதல் எழுவினா 1ற்கு இருதரப்பிலும் போதிய சாட்சியம் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

கற்றறிந்த வாதியின் வழக்கறிஞர், பிரதிவாதி குறுக்கு விசாரணையில் வா.சா.ஆ.1 ஆவணமான நிறைவேற்று மனு எண்.20/2014ல் எதிர்மனுதாரராக காட்டப்பட்டுள்ள முதலாவது நபர் சித்ரா எனது தாயார் என்றும், செல்வராணி என்பது என் பெயர்தான் என்றும் ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துள்ளார் என்றும், அதேபோன்று தாவாச்சொத்தைப் பொருத்த அமைப்புகள் நான்கெல்லை விவரங்களைப் பொருத்தும் ஒப்புக்கொண்டு சாட்சியமளித்திருப்பதாக எழுத்துமூல வாதுரையில் தெரிவித்துள்ளது. பி.வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார். நான்கெல்லை விவரத்தில் சின்ன ஏரிக்கரைக்கு மேற்கு என்றால் சரிதான் என்றும், சின்ன ஏரிக்கரைக்கு மேற்கில்தான் எங்கள் நிலம் உள்ளது என்று சொன்னால் சரிதான் என சாட்சியமளித்துள்ளார். இந்த

T ANBU Digitally signed by T ANBU Date: 2026.06.06 19:43:46 +0530

நான்கெல்லையும், தாவாச்சொத்தின் நான்கெல்லையும் குறிப்பாக தாவாச்சொத்திற்கு மேற்கில் மயான ரோடு வடக்கில் வாதியின் மற்றொரு நிலம் போன்ற அமைப்புகள் தாவாச்சொத்தின் நான்கெல்லை விவரத்துடன் ஒத்து செல்கிறது.

25. மேற்கண்ட சூழ்நிலையில் பிரிக்கப்படாத சொத்தில் கூட்டு உரிமையாளருக்கு எதிராக உறுத்துக்கட்டளை தடை உத்தரவு வழங்கக்கூடாது என கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கடுமையாக எடுத்துரைத்தார். மேலும் நிலைநிறுத்தப்பட்ட முன் தீர்ப்பின் படி கூட்டு சொத்தில் ஒவ்வொரு அங்குல இடத்திலும் கூட்டு உரிமையாளருக்கு பிரிபடாத உரிமை உள்ளது. மேலும் வா.சா.ஆ.4 ஆவணமான தாவாச்சொத்திற்கு உண்டான பட்டா ஆவணம் வாதிக்கும், பிரதிவாதிக்கும் கூட்டாக உள்ளது. எனவே, உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக்கூடாது என்பது பிரதிவாதி வழக்கறிஞரின் பிரதான வாதம் ஆகும். தாவாச்சொத்தானது வா.சா.ஆ.2 ஆவணத்தின்படி தனது தாயார் அங்கம்மாளுக்கு பாத்தியப்பட்டு, சுவாதீனம் கிடைத்து, அதன் அடிப்படையில் எழுதப்பட்ட வா.சா.ஆ.6 உயில் ஆவணத்தின் அடிப்படையில் இந்த வகையில் சொத்து எனக்குகிடைக்கப்பெற்று சொத்துக்களை அனுபவம் செய்து வருகிறேன் என சாட்சியமளித்துள்ளார். ஆனால் வா.சா.ஆ.6 உயில் ஆவணத்தினை இந்திய வாரிசுரிமை சட்டம் 1925 பிரிவு 63 உ/இ சாட்சிய சட்டப்பிரிவு 68ன் கீழ் ஒரு சான்றொப்ப சாட்சியத்தினை முன்னிலைப்படுத்தி விசாரிக்கவில்லை. இந்நிலையில் இவ்வழக்கானது அனுபவத்தினைப் பொருத்த வழக்கு என்பதால், சாட்சிய சட்டம் பிரிவு 102ன் கீழ் வாதி வழக்கினை நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார்.

26. வா.சா.ஆ.4 தாவாச்சொத்திற்கான பட்டா கூட்டுப்பட்டாவாக வாதி, பிரதிவாதியின் பெயரில் உள்ளது. வாதி வா.சா.ஆ.6 உயில் ஆவணத்தின் அடிப்படையில் தனக்கு பாத்தியப்பட்டதாக தெரிவித்துள்ள நிலையில், பிரதிவாதியின் 25.06.2025ம் தேதியிட்ட குறுக்கு விசாரணையில் சர்வே எண்.204/5 ஆதியில் பெரியசாமி பெயரில் இருந்தது என்றும், குறிப்பாக தாவாச்சொத்தை நான் பணம் கொடுத்து கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். தாவாச்சொத்து கிரையத்தொகை ரூ.10,00,000/-த்தை என் தாயாருக்குகொடுத்து வாங்கினேன் என வா.சா.ஆ.6 உயில் ஆவணத்திற்கு முரணாக

T ANBU Digitally signed by T ANBU Date: 2026.06.06 19:43:53 +0530

சாட்சியமளித்துள்ளார். வாதியானவர், தாவாச்சொத்து தனக்கு வா.சா.ஆ.6 ன் மூலம் பாத்தியப்பட்டதாகவும், பிறகு ரூ.10,00,000/- கொடுத்து கிரையம் வாங்கியதாக முன்னுக்கு பின் முரணாக சாட்சியமளித்துள்ளார். எனவே, வா.சா.ஆ.2 ஆவணத்தின்படி வாதியின் தாயார் அங்கம்மாள் தாவாச்சொத்தை தனித்து சுவாதீனம் பெற்றிருந்தாலும், அப்படியே வா.சா.ஆ.6 உயில் மூலம் வாதிக்கு கிடைத்ததாக முதல் நிரூபண வாக்குமூலத்தில் தெரிவித்துவிட்டு, ஆனால் பணம் கொடுத்து கிரையம் வாங்கினேன் என முரண்பாடாக சாட்சியமளித்துள்ளதால், வா.சா.ஆ.2 ஆவணத்தின்படி அங்கம்மாளுக்கு தனித்த சுவாதீனம் கிடைக்கப்பெற்றது, அந்த வகையிலேயே வாதிக்கு சுவாதீனம் தனித்து கிடைக்கப்பெற்றதா? என்பதை அனுமானம்கொள்ளலாம் என எத்தனித்தபோது, வாதி முரண்பாடாக ரூ.10,00,000/- கொடுத்து கிரையம் வாங்கினேன் என சாட்சியமளித்துள்ளதால், வாதி கூறியவகையில் தாவாச்சொத்து வாதிக்கு அனுபவம் சென்றதா? என்பதில் ஐயரவு நிலவுகிறது.

27. மேலும், வா.சா.1 25.06.2025ம் தேதியிட்ட குறுக்கு விசாரணையின் தொடக்கத்திலேயே இவ்வழக்கினை நான் பிரதிவாதிக்கு 10 அடி பாதை இல்லை என்பதற்காகத்தான் தாக்கல் செய்கிறேன் என பரிகாரத்தினைப் பொருத்து சற்று பிரழ்சிராக சாட்சியமளித்துள்ளார். எனவே, வாதியின் தாவா சுவாதீனத்திற்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்ட வா.ச.ஆ.4 கூட்டுப்பட்டா பட்டா தமிழ்நாடு பட்டா பாஸ்புத்தக சட்டம் 1983 பிரிவு 4ன் கீழ் அதில் குறிப்பிடப்பட்டுள்ள குறிப்புகளைப் பொருத்து சரியானவை என அனுமானம் கொள்ளலாம். மேலும், அதில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகள் சரியானவைகள் அல்ல என நிரூபிக்காத வரை அவ்வாறு அனுமானிக்கலாம் என காட்டப்பட்டுள்ளது. இவ்வழக்கில், பிரதிவாதி தாவாச்சொத்தின் நான்கெல்லை விவரத்தினை மேலேசொன்னவாறு ஒப்புக்கொண்டுள்ளார். இருந்தபோதிலும், வா.சா.ஆ.6 உயில் ஆவணம் மற்றும் அதற்கு முரணாக கிரைய ஆவணத்தின் அடிப்படையில் பாத்தியப்பட்டது என சாட்சியமளித்துள்ளதாலும், தாவாச்சொத்திற்கு உண்டான பட்டா வா.சா.ஆ.4 கூட்டுப்பட்டாவாக உள்ளதால், இதனைப் பொருத்து வாதியின் தரப்பில் விளக்கம் இல்லாததாலும், தாவாச்சொத்தில் வாதியின் அனுபவம் தனித்து வாதியின் தாயார் அங்கம்மாள் வா.சா.ஆ.2 ஆவணத்தின்படி சுவாதீனம் பெற்றபடி தனித்து சுவாதீனத்தில் இருப்பதாக வாதியின் தரப்பில் முழுமையான

T ANBU
Digitally signed by T ANBU
Date: 2026.06.06 19:44:00 +0530

சாட்சியம் முன்னிலைப்படுத்தவில்லை.

28. மேலும் வா.சா.ஆ.5 புகைப்படம் மற்றும் வா.சா.ஆ.10 புகைப்படம் ஆகிய இரண்டு புகைப்பட ஆவணங்களும் சாட்சிய சட்டப்பிரிவு 65B ன் கீழ் சான்றிதழ் இணைப்படவில்லை. இது தொடர்பாக பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. கற்றறிந்த வாதியின் தரப்பு வழக்கறிஞர் சாட்சி ஒப்புக்கொண்டதால், ஆவணமாக குறியீடு செய்கிறேன் என பதில் தெரிவித்துள்ளார். புகைப்படத்திற்கு சாட்சிய சட்டப்பிரிவு 65B ன் கீழ் சான்றிதழ் கட்டாயம். எனவே, மேற்கண்ட இரு புகைப்படங்களும் சாட்சியாக ஏற்றுக்கொள்ளப்பட முடியாது.

29. பி.வா.சா.ஆ.3 பிரதிவாதி துறையூர் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனுவில், வாதி எனது பாட்டி இயற்கை எய்திய பிறகு நிலத்தினை பராமரித்து வருகிறார். 19.03.2023 அன்று சவால்விட்டுவிட்டு சென்றார் எனவும், அடிக்கடி தகராறு செய்வார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளதால், தாவாச்சொத்து வாதி, பிரதிவாதிக்கு இடையே பூசல் உள்ளது என்பதை அறிய முடிகிறது. இருந்தபோதிலும், வாதி வாதுரைத்தவாறு, வா.சா.ஆ.6 உயில் ஆவணத்தின்படி தனக்கு பாத்தியப்பட்டது என முதலில் சாட்சியமளித்துவிட்டு பிறகு ரூ.10,00,000/- கொடுத்து கிரையம் வாங்கியதாக முன்னுக்கு பின் முரணாகவும், அங்கம்மாளுக்கு கிடைத்த அதே வகையில் தனக்கு கிடைத்ததாக குறிப்பிட்டு இருந்த போதிலும், தனித்த சுவாதீனத்திற்கான ஆவணத்தினை தாக்கல் செய்யாததாலும், வா.சா.ஆ.4 தாவாச்சொத்திற்கான கூட்டுப்பட்டாவாக இருப்பதாலும், வாதி வாதுரைத்தவாறு, தன்னுடைய தனித்த சுவாதீனத்தினை நிரூபிக்காததாலும், வாதி தாவாச்சொத்தின் தனித்த சுவாதீனத்தில் இல்லை என்பதாலும், வா.சா.ஆ.4 ஆவணத்தின்படி தாவாச்சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் உள்ளதால், வாதி கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல எனவும், அந்த வகையில் வாதி தாவாச்சொத்தின் தனித்த சுவாதீனத்தில் இல்லை எனவும், இந்த எழுவினாக்களுக்கு வாதிக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

**30. <u>எழுவினா. 4</u>**

வாதிக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரம் என்ன? என்பதைப்பற்றி பரிசீலிக்கையில்:-

T ANBU Digitally signed by T ANBU Date: 2026.06.06 19:44:09 +0530

எழுவினாக்கள் 1 முதல் 3 ஆகியவற்றிற்கு வாதிக்கு எதிராக தீர்வு கண்டுள்ளதால், வேறு எந்த பரிகாரங்களும் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என இந்த எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

இறுதியாக வாதியின் வழக்கை தள்ளுபடி செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. செலவுத்தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தாளருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் படித்துப்பார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஜுன் திங்கள் 6 ம் நாளான இன்று இந்நீதிமன்றத்தின் முன் அவையறிய பகரப்பட்டது.

T ANBU
Digitally signed by T ANBU
Date: 2026.06.06 19:44:17 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
துறையூர்.

<u>**வாதி தரப்பு சாட்சிகள்**</u>

வா.சா.1 தனம் (எ) தனபாக்கியம்
வா.சா.2 காளிதாஸ்

<u>**வாதி தரப்பு சான்றாவணங்கள்.**</u>

| **ஆவண எண்.** | **தேதி** | **ஆவணம்** | **ஆவணத்தின் தன்மை** |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 18.03.2016 | நிறைவேற்று மனு எண்.20/2014 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு | நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | – | நிறைவேற்று மனு எண்.20/2014 ன் மனு | நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | – | அங்கம்மாளின் வாரிசு சான்றிதழ் | கணினி நகல் |
| வா.சா.ஆ.4 | – | வாதி பெயரில் உள்ள சர்வே | கணினி நகல் |

| | | | |
|---|---|---|---|
| | | எண்.204/5 சி–க்கான கூட்டு பட்டா | |
| வா.சா.ஆ.5 | – | தாவாச்சொத்தில் கதிர் அறுக்கும் இயந்திரத்தை இறக்கியதாக சொல்லப்படும் வழித்தடத்தினை காண்பிக்கக்கூடிய புகைப்படம் | அசல் |
| வா.சா.ஆ.6 | 30.01.2009 | அங்கம்மாள் வாதிக்கு எழுதிவைத்த உயில் ஆவணம் | அசல் |
| வா.சா.ஆ.7 | 04.01.2018 | அங்கம்மாளின் இறப்பு சான்றிதழ் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.8 | – | வா.சா.1 ன் ஆதார் அடையாள அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) | நகல் |
| வா.சா.ஆ.9 | | வழித்தடம் சம்மந்தமாக புகைப்படத்துடன் கூடிய சி.டி. | அசல் |
| வா.சா.ஆ.10 | – | தாவாச்சொத்தை காண்பிக்கக்கூடிய புகைப்படம் | அசல் |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள்,</u>**

பி.வா.சா.1 செல்வராணி

**<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்</u>**

| **ஆவண எண்.** | **தேதி** | **ஆவணம்** | **ஆவணத்தின் தன்மை** |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 20.03.1980 | பனையடியான் மூப்பன் வகையறா சேர்ந்து எழுதிக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் | சான்றிட்ட நகல் |

T ANBU

Digitally signed by T ANBU
Date: 2026.06.06 19:44:30 +0530

| | | | |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.2 | 11.05.1981 | பெரியசாமியின் இறப்பு சான்றிதழ் | அசல் |
| பி.வா.சா.ஆ.3 | 01.05.1981 | பிரதிவாதி, துறையூர் காவல் உதவி ஆய்வாளர் அவர்களுக்கு அனுப்பிய கடிதம் | அசல் |

T ANBU
Digitally signed by T ANBU
Date: 2026.06.06 19:44:37 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
துறையூர்.

Visit **ecourts.gov.in** for updates or download mobile app “**eCourts Services**” from Android or iOS